# முதன்மை மாவட்ட நீதிமன்றம், பெரம்பலூர்.

# MCOP. No.75/2024

2026–ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 05ம் நாள் வியாழக்கிழமை மனுதாரர்/எதிர்மனுதாரர் தரப்பு சாட்சியமாகிய **ம.சா.2 வது** நபரின் வாக்குமூலம் (1969–ம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திருமதி. ஆ. பாப்பாத்தி, கிரேடு–1 பெஞ்ச் கிளார்க் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ராஜா | வயது | : | |
| த/பெ (அ) க/பெ | : | | தொழில் | : | |
| ஊர் | : | | வட்டம் | : | |
| மாவட்டம் | : | | | : | |

**முதல் விசாரணை:**

நான் இந்த வழக்கில் நிருபண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். அதிலுள்ள விவரங்கள் எனக்கு தெரியும். நிருபண வாக்குமூலத்தை படித்து பார்த்து தான் கையொப்பம் செய்தேன்.

**எதிர்மனுதாரர் தரப்பு குறுக்குவிசாரணை**:

நான் விபத்து சமயத்தில் திருச்சி – சென்னை நெடுஞ்சாலையில் நின்றுகொண்டிருந்தேன். விபத்து சம்மந்தமாக நான் காவல்நிலையத்தில் புகார் கொடுக்கவில்லை. நான் Highway Patrolக்கு தகவல் சொன்னேன். அடிப்பட்டவரை ஆஸ்பத்திரிக்கு நான் அனுப்பினேன். மோட்டார்சைக்கிள் ஓட்டிசென்ற நபர்களின் பெயர் எனக்கு தெரியாது. அவர்கள் ஹெல்மெட் அணியவில்லை என்றால் சரிதான். அது Honda வாகனமாகும். அதனுடைய பதிவு எண் எனக்கு தெரியாது. அவர்கள் எந்த ஊரை சேர்ந்தவர்கள் என்று எனக்கு தெரியாது. விபத்து சமயத்தில் என்னுடன் எங்கள் ஊரைசேர்ந்த சசிக்குமார் மற்றும் அஜித் என்னுடன் நின்றுகொண்டிருந்தார்கள். நாங்கள் மூவரை தவிர வேறு யாரும் இல்லை. நான் போய் பார்க்கும்போது சென்டர் மீடியன் அருகில் மோட்டார்சைக்கிளில் சென்றவர்கள் விழுந்துகிடந்தார்கள். அடிப்பட்ட பிறகு

சத்தம்கேட்டு போய்பார்த்தோம். பஸ்போய்விட்டது. அது எந்த பஸ் என்று தெரியாது என்றால் வெள்ளை கலர் பஸ் ஆகும். அந்த பேருந்து பதிவு எண்ணை நான் பார்க்கவில்லை என்றால் சரியல்ல. 3223 என்று நான்கு எண்கள் தெரிந்தது. அதை தான் போலிசில் சொன்னேன். போலிசார் விபத்து சம்மந்தமாக என்னை விசாரிக்கவில்லை. விபத்து சம்மந்தமாக குன்னம் நீதித்துறை நடுவர் மன்றத்தில் நான் சாட்சியம் அளித்துள்ளேன். தற்போது சொன்ன விவரங்களை தான் அந்த வழக்கு விசாரணையின் போது சொன்னேன். நான் விபத்தை நேரடியாக பார்க்கவில்லை என்றும், மனுதாரர்களுக்கு இழப்பீடு கிடைக்கவேண்டும் என்பதற்காக பார்க்காத சம்பவத்தை பார்த்ததாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை:**

இல்லை.

Sd/-V.PADMANABHAN,
Principal District Judge,
Perambalur.